செ.வெ.எண்: 26/மே நாள்: 12.05.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## இரவு நேரங்களில் தேர்தல் முறைகேடுகளை தடுப்பதற்காக மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும் கூடுதலாக தலா 3 பறக்கும் படை குழுவினர்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் இன்று (12.05.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு, இரவு நேரங்களில் தேர்தல் முறைகேடுகளை தடுப்பதற்காக மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும் கூடுதலாக தலா 3 பறக்கும் படை குழுவினர் வீதம் மொத்தம் 12 பறக்கும்படை குழுவினர்களின் வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்பின்பு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகளை கண்காணித்திடும் விதமாக மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் தலா 3 பறக்கும்படை வாகனங்கள் வீதம் 12 வாகனங்களும் தலா 1 நிலைக் கண்காணிப்புக்குழு வாகனம் வீதம் 4 வாகனங்களும் ஆக மொத்தம் 16 வாகனங்கள் ஜி.பி.எஸ் கருவி பொருத்தப்பட்டு 24 மணிநேரமும் தொடர்ந்து சுழற்ச்சி முறையில் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி பதற்றமான சட்டமன்ற தொகுதியாக கண்டறியப்பட்டுள்ள திருவாடானை சட்டமன்ற தொகுதியில் கூடுதலாக 3 பறக்கும் படை குழுவினர்கள் நியமிக்கப்பட்டு கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும், வாக்குப்பதிவு நாள் நெருங்குவதை முன்னிட்டு இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, இரவு நேரங்களில் தேர்தல் முறைகேடுகளை தடுப்பதற்காக மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும் கூடுதலாக தலா 3 பறக்கும் படை குழுவினர் நியமிக்கப்பட்டு இரவு நேரங்களில் மட்டும் இக்குழுவினர் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். மேலும், முன்னதாக நியமிக்கப்பட்டுள்ள நிலைக்கண்காணிப்புக் குழுவினர்களும் தற்போது பறக்கும் படை குழுவினர்களாக செயல்பட்டு வருகின்றனர். இதன் மூலம் இரவு நேரங்களில் தேர்தல் முறைகேடுகளை தடுப்பதற்காக ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளிலும் ஓரே நேரத்தில் மொத்தம் 5 பறக்கும் படை குழுவினர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதுதவிர, மாவட்டத்தில் தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள மொத்தம் 119 மண்டல குழுவினர்களும் (ஒரு குழுவிற்கு 1 காவலர், 1 வருவாய்த்துறை அலுவலர்) தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதன்மூலம், தேர்தல் முறைகேடுகளை தடுத்திடும் விதமாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலிஅக்பர், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.இரா.ராம்பிரதீபன், தேர்தல் வட்டாட்சியர் திரு.இரா.தர்மன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**